புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • மே (May) 28, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 22 • விலை(PRICE) ரூ.6.00



# வந்துவிட்டது கட்சிமாறல் கலாச்சாரம்!

தமிழ்நாடு இதுவரை இத்தகைய கட்சி மாறும் காட்சிகளைக் கண்டது இல்லை. குதிரை பேரம் கொடி கட்டி பறக்கிறது. பெரும்பான்மை இல்லாத 'தமிழக வெற்றிக் கழகத்திற்கு' காங்கிரஸ் ஓடிப்போய் ஆதரவு அளித்தது. திமுக அணியில் இருந்து போட்டியிட்டு தவெக, அஇஅதிமுக வேட்பாளர்களைத் தோற்கடித்தவர்கள் ஒரே நாளில் அணி மாறினார்கள். அடுத்த 5-ஆண்டுகளுக்கு தவெக அணிதான் என்று கூச்சமின்றி அறிவித்தார்கள். பாஜக தலையிடாமல் தடுக்கிறோம் என்று காரணம் கூறினார்கள். ஆனால் பாஜகவின் கட்சிமாறல் கலாச்சாரத்தை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள் என்பதுதான் உண்மை!

காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்த பல மாநிலங்களில் அந்த கட்சியில் இருந்து எம்.எல்.ஏ-க்களை பேரம் பேசி இழுத்து கட்சி மாறசெய்யும் பாஜகவின் அரசியல் கலாச்சாரத்தை அப்படியே இப்போது வெட்கமின்றி பின்பற்றுகிறது காங்கிரஸ். அசாம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, கோவா, மணிப்பூர், அருணாச்சல பிரதேசம் போன்ற மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிகளை உடைத்து தனது ஆட்சிகளை நியமித்துக் கொண்டது பாஜக.

2017-ல் கோவாவில் 13 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற பாஜக 17 இடங்களில் வெற்றி பெற்று இருந்த காங்கிரஸ் உறுப்பினர்களை கட்சி மாற வைத்து ஆட்சி அமைத்தது. மனோகர் பாரிக்கர் முதலமைச்சரானார்; அவர் மரணம் அடைந்தார்; 2019ல் 10 காங்கிரஸ் உறுப்பினர்களை விலைக்கு வாங்கியது பாஜக. 1967-ல் தேர்தலில் 'கயா ராம்' என்பவர் அடிக்கடி கட்சி தாவல் செய்து கொண்டிருந்தார். எனவே இந்த கட்சித் தாவலுக்கு 'ஆயா ராம் கயா ராம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

ஆந்திராவில் என்.டி.ராமராவ் தொடங்கிய தெலுங்கு தேசம் கட்சி ஆட்சியை அவர் வெளிநாடு சென்ற காலத்தில் பாஸ்கர் ராவ் என்பவர் இரண்டாக உடைத்து துரோகம் செய்தார். நாடு திரும்பிய என்.டி. ராமராவ் கட்சி தாவியவர்களை மீண்டும் இணைத்து குடியரசுத் தலைவர் முன்நிறுத்தி இழந்த ஆட்சியை மீட்டார் என்பது வரலாறு!

பாஜக கூட்டணியில் போட்டியிட்ட அஇஅதிமுகவினரை தவெகவில் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று நிபந்தனை விதித்த காங்கிரஸ்; இப்போது பாஜக கூட்டணியில் போட்டியிட்ட ஒரு பிரிவினரை குதிரை பேரம் நடத்தி தன் பக்கம் தவெக எடுத்திருக்கிறது இதை காங்கிரஸ் தலைவர் மாணிக் தாகூர் நியாயப்படுத்துகிறார். அதே கட்சியை சேர்ந்த எம்.பி ஜோதிமணி எதிர்க்கிறார்.

மீண்டும் ஒரு தேர்தல் திணிக்கப்படக் கூடாது அல்லது குடியரசுத் தலைவர் ஆட்சி திணிக்கப்பட்டு விடக்கூடாது என்ற ஒரே நோக்கத்தோடு இடதுசாரி கட்சிகள் வெளியில் இருந்து மெஜாரிட்டி எண்ணிக்கையைக் காட்டுவதற்கு தங்கள் கட்சி வாக்குகளை அளிக்க முன்வந்தார்கள். ஆட்சியைக் கவிழ்க்கக் கூடாது என்பதாலேயே திமுகவும் எதிர்த்து வாக்களிக்காமல் வெளிநடப்பு செய்தது. இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மட்டும் வேறுபட்ட நிலையை எடுத்தது. வெளியில் இருந்து ஆதரவு என்று அறிவித்த அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் பிறகு காங்கிரஸ் கட்சியின் வழியில் கூட்டணி அமைச்சரவையில் இணையும் முடிவை எடுத்து அனைவரையும் வியப்படையச் செய்து விட்டார்.

அம்பேத்கர் கூறிய அதிகாரத்தில் பங்கு என்பது என்ன? அரசியல் அதிகாரத்தின் தேவையை உணர்த்திய அம்பேத்கர் தேர்தல் ஜனநாயகம் மட்டும் வெற்றியைத் தேடி தராது; சமூக ஜனநாயகம் அதைவிட முக்கியம் என்றார். 33 பேர் அமைச்சரவையில் ஒரே ஒருவர் மட்டுமே விடுதலை சிறுத்தைகள் சார்பில் அமைச்சராகி மக்களுக்கான அதிகாரத்தை மீட்டு விட முடியுமா? 120 உறுப்பினர்களில் இருவர் மட்டுமே விடுதலை சிறுத்தைகள்.

இனி எதிர்காலத்தில் அக்கட்சியின் செயல்பாடுகள் எப்படி அமையப் போகின்றன என்ற கேள்விகள் எழுகின்றன. கூட்டணி அமைச்சரவையில் இடம்பெற்றுக் கொண்டு தவெக கூட்டணியில் இல்லை என்று கூறுவதில் கூட்டணி நேர்மை இல்லை. இந்தியாவில் மாநிலங்கள் ஒரு நகரசபை போலத்தான் அதிகாரமற்று இயங்குகின்றன. எனவே தமிழ்த்தேசிய அரசியலே உண்மையான அதிகாரத்தை மீட்டெடுக்கும் என்ற உண்மையான கருத்தை பேசிவந்த கட்சி மாநிலத்தில் ஒரு அமைச்சர் பதவியை ஏற்பதை அதிகாரத்தில் பங்கு என்று கூறுவதை எப்படி நியாயப்படுத்த முடியும்?.

பெரும்பான்மை எண்ணிக்கைக்குத் தேவையான இடங்கள் கிடைத்த பிறகு அஇஅதிமுக கூட்டணியை உடைக்கும் முயற்சிகளில் தவெக ஏன் இறங்க வேண்டும்? உறுப்பினர்கள் அவர்களாகவே விரும்பி வருகிறார்கள் என்ற கருத்து மக்களை ஏமாற்றுவதாகும். காங்கிரசை உடைத்த பாஜக இதே கருத்தை தான் கூறியது. அமைச்சர் செங்கோட்டையன் போல தேர்தலுக்கு முன் தானாக போய் சேர்ந்தார்களா? தங்களது கட்சி வெற்றி பெறவில்லை, தவெகவிற்கு பெரும்பான்மை இல்லாமல் போனதாலும் பதவி ஆசையால் உருவான விருப்பத்தை எப்படி தானாக வந்த விருப்பமாக கூறமுடியும்?

எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய வேலுமணி அணியை மட்டும் தனிமைப்படுத்தி முதலமைச்சர் ஜோசப். விஜய் சந்தித்து ஆடை போர்த்தி வரவேற்றார். அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அவர் சந்தித்தது போல அஇஅதிமுக கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமியை ஏன் சந்திக்கவில்லை? அதற்கு மாறாக பழனிசாமிக்கு எதிராக போர்க் கொடி தூக்கிய எதிர்ப்பு அணியை மட்டும் ஏன் முதலமைச்சர் சந்தித்தார்? இதிலிருந்து அவர் கட்சியை உடைக்கவே விரும்புகிறார் என்ற முடிவுக்கு எளிதாக வந்துவிட முடியும். பெரும்பான்மையை எட்டிய நிலையில் ஊழல்வாதிகளாக குற்றம்சாட்டப்பட்டவர்களை ஏன் சேர்க்க வேண்டும்?

பேரவைத் தலைவரிடம் விலகல் கடிதத்தை தந்த உடனேயே அவர்களுக்காக ஏற்கனவே தயாராக வைக்கப்பட்டிருந்த தவெக கட்சி உறுப்பினர் அட்டையும் உடனடியாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதிலிருந்து பின்னணியில் தவெக இருக்கிறது உறுதியாகிறது. 20 நாட்களுக்கு முன்பு எந்த விசில் சின்னத்தை எதிர்த்து ஓட்டு கேட்டார்களோ அதே விசில் சின்னத்துக்கு ஓட்டு கேட்பது வழியாக வாக்களித்த மக்களை இவர்கள் அவமதிக்கிறார்கள்?

தேர்தல் ஆணையம் தேர்தலை உடனே நடத்துமா? வழக்கு நீதிமன்றம் போவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டால் நீதிமன்றத்தில் எவ்வளவு காலம் வழக்கு நடக்கும்? நீதிமன்றத்தினுடைய முடிவு என்னவாக இருக்கப் போகிறது.

தூய சக்தி என கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த கட்சி அதிமுக ஆதரவை பெற மாட்டோம் என்று ஆதரவு சக்திகளிடம் உறுதியளித்துவிட்டு அக்கட்சிகளை உடைக்க முயற்சிப்பதுதான் தூய சக்தியா? இது பாஜக வழியில் நடைபோடுவதாகும். இனி எப்போது அமைச்சர் பதவி கிடைக்கப்போகிறது? இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடலாமா? என்ற துடிப்புதான் மேலோங்கி இருக்கிறது. வட மாநிலங்களில் நடக்கும் கட்சி தாவல் கலாச்சாரம் தமிழ்நாட்டில் நுழைந்திருப்பது தமிழ்நாட்டை தலைகுனிய வைத்து விட்டது என்பது மட்டும் உண்மை!

## கதற வைத்த கரப்பான் பூச்சி கட்சி!

அவமதிப்பு வழக்குகள் நீதிமன்றம் வரும்போது 'நான் அப்படி அந்த அர்த்தத்தில் பேசவில்லை' என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள் விளக்கம் தருவது வாடிக்கை; அதை நீதிபதிகள் கேட்டுக் கொண்டு இருப்பார்கள். இப்போது நிலைமை தலைகீழாக மாறி இருக்கிறது. "நான் கரப்பான் பூச்சி என்று வேலை தேடும் இளைஞர்களை கூறவில்லை; போலி வழக்கறிஞர்களைத் தான் குறிப்பிட்டேன்" என்று ஒரு நீதிபதியே தன்னிலை விளக்கம் கூறிய நிலை வந்துவிட்டது. அதுவும் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருக்கும் சூரியகாந்த்.




இளைஞர்கள் கொதித்தெழுந்து விட்டார்கள். இணையத்தில் 'கரப்பான்பூச்சி ஜனதா கட்சியை' அபிஜீத் திப்கே என்ற அமெரிக்க பல்கலைக்கழக மாணவர் தொடங்கினார். இவர் ஆம்ஆத்மி கட்சியில் சேர்ந்து பிறகு விலகியவர்.2 கோடிக்கு அதிகமான இளைஞர்கள் உறுப்பினர்களாகிவிட்டார்கள். கரப்பான் பூச்சி படையால் பதறிப்போன மோடி ஆட்சி அவர்களது முகநூல் பக்கத்தை முடக்கி தேசவிரோதிகள் என்று முத்திரை குத்துகிறது.

கரப்பான் பூச்சி கட்சி தனது கொள்கையாக 5 அம்சங்களை தெரிவித்திருக்கிறது. ஓய்வு பெறும் நீதிபதிளுக்கு எம்.பி பதவி தரக்கூடாது.

ஓட்டு மோசடி நடந்தால் தேர்தல் ஆணையத் தலைவரை 'உபா' சட்டத்தில் கைது செய்யவேண்டும்.

பெண்களுக்கு 50% விழுக்காடு இட ஒதுக்கீடு வேண்டும்.

அம்பானி, அதானி பிடியில் இருந்து ஊடகங்களை விடுவிக்க வேண்டும். என்பதே இவர்களுடைய 5 அம்ச கொள்கைகள்

கரப்பான் பூச்சி கட்சி சென்னையிலும், மதுரையிலும் தனது ஆர்ப்பாட்டங்களை இடதுசாரிகள் ஆதரவுடன் நடத்தி இருக்கிறது. ஒன்றிய உயர்கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வீட்டிற்குமுன் திரண்டு நீட் முறைகேடுகளை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். இளைஞர்களுடைய எழுச்சி ஒன்றிய மோடி ஆட்சிக்கு எதிராக திரும்பி இருக்கிறது. வேலை இல்லா திண்டாட்டத்தை அனுமதித்தவர்கள். இன்றைக்கு இந்த போராட்டத்தைக் கண்டு நடுங்கிபோகிறார்கள்.

## பாலியல் படுகொலை: சிறுமியின் குடும்பத்தினருக்கு கழகத் தலைவர் ஆறுதல்

கோவையில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட 10 வயது சிறுமியின் சொந்த ஊரான சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம்,கொளத்தூர் உக்கம்பருத்திக்காடு பகுதியில் உள்ள சிறுமியின் இல்லத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி நேரில் சென்று சிறுமியின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார்.

இதில் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ், சேலம் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன், கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் விஜயக்குமார், கொளத்தூர் நகரச் செயலாளர் அறிவுச்செல்வன், ஆசிரியர் செல்வேந்திரன், சுரேஷ், ராஜா, அழகேஸ்வரி, அவினாசி, குமரன் நகர் பகுதித் தலைவர் தேவராஜ், கார்த்தி, அரவிந்த், பிரசாந்த், அமுதன், கணேஷ், அம்ஜித்கான், கோபிகிருஷ்ணன் கோபால், மணிரத்தினம், ப்ரீத்தி, ராஜேஸ்வரன், அம்முகுட்டி, செந்தமிழ் கலைஅமுதன் ஆகிய மேட்டூர், கொளத்தூர் பகுதி கழகத் தோழர்கள் கலந்துகொண்டு சிறுமியின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.



# அறநிலையத்துறைக்கு பார்ப்பன அமைச்சரா?

***இந்து அறநிலையத்துறையின் பார்ப்பன அமைச்சரையும், இயக்குனரான பார்ப்பன அதிகாரியையும் திரும்பப் பெற வேண்டும்! கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை !***

*"தமிழ்நாட்டின் புதிய அமைச்சரவையில் ஏழு பேர் பட்டியல் இனப் பிரிவினரும், 4 பெண்களும் இடம் பெற்று இருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். அதே நேரத்தில் அறநிலையத்துறை அமைச்சராக இந்த பட்டியல் இனப் பிரிவினரில் ஒருவரை ஏன் நியமிக்க கூடாது என்ற எண்ணம் எழத்தான் செய்கிறது.*



*இந்தத் துறைக்கு அமைச்சராகவும் துறையின் இயக்குனராகவும் பார்ப்பனர்களையே தேர்ந்தெடுத்து நியமித்திருப்பதின் நோக்கம் என்ன என்ற கேள்வியும் எழுகிறது. நீதிக்கட்சி ஆட்சி காலத்தில் பனகல் அரசர் முதன் முதலாக கொண்டு வந்த அறநிலையத்துறை சட்டம் (Hindu Devastaan Act) பார்ப்பனர்கள் கொள்ளையிலிருந்து கோயில்களை காப்பாற்றுவதற்காகத் தான்! அப்போதிலிருந்தே பார்ப்பனர்கள் அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். பிறகு ஓமந்தூரரார் முதலமைச்சராக இருந்த காலத்தில் இதற்கான முழு சட்ட வடிவம் ( Hindu Religious Endowments Act) கொண்டுவரப்பட்டது. அப்போதும் பார்ப்பனர்களின் கடுமையான எதிர்ப்பு இருந்தது.*

*பல்வேறு பிரிவுகளைக் கொண்ட இந்து மதம் இப்போது ஒற்றை மதமாக்கப்பட்டு பார்ப்பனர்களின் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு விட்டது. அனைத்து இந்துக்களும் அர்ச்சகர்கள் ஆகும் உரிமை கிடையாது.அது பார்ப்பனர்களுக்கு மட்டுமே என்று நீதிமன்றங்கள் வழியாக பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறார்கள்.*

*இப்போதும் கோயில் திருவிழாக்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனத்துக்காக தரையில் காத்துக் கிடக்க, பல்லக்கிலும் தேரிலும் இரண்டு அல்லது மூன்று பார்ப்பனர்கள் சட்டை இல்லாமல் பூணூல் அடையாளத்தை காட்டிக் கொண்டு நிற்பது எதைக் காட்டுகிறது? இந்து மதமும் இந்துக்களும் பார்ப்பனர்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதைத் தானே?*

*இந்து மதத்தை மட்டுமல்ல,அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந்து அறநிலையத்துறையையும் கட்டுப்படுத்தக் கூடியவர்கள் பார்ப்பனர்கள் தான் என்பதை உணர்த்துவதாகத் தான் இந்த நியமனங்கள் அமைந்திருக்கின்றன.*

*இந்த பார்ப்பன அமைச்சர் ஏற்கனவே ஒரு பதிவில் பாஜகவின் குரலை எதிரொலித்திருக்கிறார்.அதாவது கோயிலில் தமிழ் வழிபாட்டு உரிமை கேட்பவர்கள் ஏன் முஸ்லிம் கிறிஸ்தவ மதங்களை நோக்கி அந்த கேள்விகளைக் கேட்பதில்லை என்று அவர் கேட்டிருக்கிறார்.*

*இப்படி பாஜக மனநிலை கொண்ட ஒருவரை அறநிலையத்துறையின் அமைச்சராக நியமித்திருப்பது ஏற்கத் தக்கது அல்ல. இந்த முடிவு தமிழ்மக்களின் உளவியலுக்கு எதிரானது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.*


*முதலமைச்சர் மாண்புமிகு ச.ஜோசப் விஜய் இந்து அறநிலையத்துறையின் பார்ப்பன அமைச்சரையும், இயக்குனரான பார்ப்பன அதிகாரியையும் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.*
*(குறிப்பு: அறநிலையத்துறையின் செயலாளராக இருந்த பார்ப்பன பெண் அதிகாரி மாற்றப்பட்டு குமரகுருபன் என்ற பார்ப்பனரல்லாத அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். இது பாராட்டுக்குரியது!)*

***- "கொளத்தூர் மணி,"***
***தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.***
***22.05.26***

## சமஸ்கிருதத்துக்கு ரூ.2532 கோடி!

*2015-லிருந்து 2020 வரை சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஒதுக்கிய தொகை அதன் பார்ப்பனிய ஆதரவை வெளிப்படுத்துகிறது.*

*சமஸ்கிருதம் - ரூ. 2,532 கோடி;*
*உருது - ரூ.837 கோடி*
*இந்தி - ரூ. 426 கோடி*
*தமிழ்- ரூ. 113 கோடி*



*கன்னடம், தெலுங்கு, மலையாளம் மற்றும் ஒடியா மொழிகளுக்கு சேர்த்து ஒதுக்கிய தொகை வெறும் ரூ.31 கோடி. மக்கள் பேச்சு வழக்கில் இல்லாத பார்ப்பனிய வேதமத சடங்குகளுக்கு மட்டுமே பயன்படுத்தும் மொழிக்கு ரூ.2,532 கொடி ஒதுக்கியுள்ளனர். மக்கள் பேசாத மொழி; பார்ப்பனர்கள் கோயிலில் மட்டும் பேசும் மொழி சமஸ்கிருதம்.*

*இந்நிலையில் கடந்த மே-15, ஆம் தேதி மத்திய மேல்நிலை கல்வி வாரியம் சி.பி.எஸ்.சி-க்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. சி.பி.எஸ்சி பள்ளிகளில் 9-ம் வகுப்பில் மும்மொழித் திட்டத்தை அமல்படுத்த வற்புறுத்துகிறது அந்த சுற்றறிக்கை. இரண்டு இந்திய மொழிகளோடு அந்நிய மொழியை கற்பிக்க வேண்டும். இந்தி பேசாத மாநிலங்களில் மாநில மொழி, ஆங்கிலம் இரண்டைத் தவிர மூன்றாவது மொழியாக இந்தி அல்லது சமஸ்கிருதம் திணிக்கப்படுகிறது.*

*சமஸ்கிருதத்துக்கு ஒதுக்கப்பட்ட கூடுதல் தொகையால் வேத பார்ப்பனர்கள்தான் அனைத்துப் பள்ளிகளிலும் நிரம்பி வழிவார்கள். எனவே சமஸ்கிருதத்தை கட்டாயமாகத் திணிக்கும் நோக்கத்திலேயே இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அகில இந்திய கல்வி பாதுகாப்பு குழு பொதுச்செயலாளர் தருண் காந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் இதைக் குறிப்பிட்டு அந்த சுற்றறிக்கை திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.*

## பாஜக பாதையில் காங்கிரஸ்!

*மேற்கு வங்கத்தில் தேர்தல் அதிகாரியாக இருந்த மனோஜ் அகர்வால் என்பவரை தேர்தல் முடிந்தவுடன் ஆட்சிக்கு வந்த பாஜக தலைமைச் செயலாளராக நியமித்தது இதை ராகுல் காந்தி வன்மையாககண்டித்தார். ‘பெரிய திருட்டுக்கு பெரியமரியாதை’ என்று கூறியதோடு தேர்தல் ஆணையத்தோடு பாஜக கள்ள உறவு வைத்திருந்தது அம்பலமாகி உள்ளது என்று கூறினார்.*



*இப்போது கேரளாவில் ஆட்சியைப் பிடித்துள்ளது காங்கிரஸ். முதலமைச்சர் சதீசன் தனது செயலாளர் பதவிக்கு மாநிலத்தில் தேர்தல் ஆணையராக பணியாற்றிய ரத்தன்கேல்கர் என்பவரை நியமித்திருக்கிறார். பாஜக காட்டிய பாதையில் கேரள காங்கிரஸ் பயணிக்கிறது. மேற்கு வங்கத்தில் நடந்தது பெரிய திருட்டு என்று கூறிய ராகுல் காந்தி கேரளாவில் நடந்த இந்த திருட்டுக்கு வாய் திறக்காமல் மௌனம் சாதிக்கிறார்!*

## பட்டியலின பிரிவினருக்கு திமுக ஆட்சியின் சாதனைகள் சிந்தனைச்செல்வன் விளக்கம்!

***விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் ’திராவிட மாடல்’ ஆட்சியில் பட்டியலின பிரிவினருக்கு கிடைத்த திட்டங்களை விளக்கி வெளியிட்ட முகநூல் பதிவின் ஒரு பகுதி.***

*எமது கோரிக்கைகளின் நியாயத்தை ஏற்று அவற்றை அரசாணைகளாக மாற்றிய மாண்புமிகு மேனாள் முதல்வர் அண்ணன் ஸ்டாலின் அவர்களுக்கு எனது இதயம் நிறைந்த நன்றியை இந்த தருணத்திலும் மனப்பூர்வமாக பதிவிடுகிறேன். தேர்தல் தோல்வியின் போதுகூட கலங்காத என் மனம் இதை எழுதும் போது நன்றியால் கரைகிறது. இந்த நன்றியை பதிவு செய்வது என் அரசியல் வாழ்வின் குறைந்த பட்ச அறம் என நம்புகிறேன்.*

★ *எமது ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு தேசிய ஆணையம் இருப்பதை போல The Tamilnadu State Commission for the Scheduled Castes and Scheduled Tribes Act 2021 எனும் சட்டம் இயற்றப்பட்டு 22.09.2021 அன்று தமிழ்நாடு SC/ST மாநில ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.*

★ *அரசின் அனைத்து திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கங்களில் எஸ்.சி எஸ்.டி பிரிவினருக்கு உரிய விகிதாச்சார ஒதுக்கீடு கிடைப்பதை சட்டப்பூர்வமாய் உறுதி செய்திட (சிறப்பு உட்கூறு திட்டம்) SC/ST Development Action Plan Act 2024 எனும் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.*

★ *ஒப்பந்த பணி மற்றும் கொள்முதல்களில் எஸ்.சி எஸ்.டி பிரிவினருக்கு ஒன்றிய அரசு 3% முன்னுரிமை வழங்குவதைப் போல தமிழகத்தில் அரசு ஒப்பந்த பணி மற்றும் கொள்முதல்களில் 5% முன்னுரிமை வழங்கும் வகையில் Tender Transparency Act ல் திருத்தம் (Amendment) மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

★ *எஸ்.சி எஸ்.டி பிரிவை சார்ந்த தொழில் முனைவோர் வங்கி கடனில் 35 % முன் ஒப்பளிப்பு மானியம் (Front end Subsidy) பெறும் வகையில் (அதிகபட்சம் ரூ.1.5 கோடி )ஆண்டுக்கு ரூ.200 கோடியில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்.*

★ *சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டியல் இன மாணவர்கள் பயில ரூ.36 இலட்சம் முதல் ரூ.24 இலட்சம் வரை உதவித்தொகை வழங்கும் அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவி திட்டம் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.*

★ *பட்டியல் வகுப்பார் குடியிருப்புகளில் இதுவரை நிறைவேற்றப்படாமல் உள்ள அடிப்படை வசதிகளை உருவாக்கிட ஆண்டுக்கு ரூ.200 கோடி ஒதுக்கீட்டில் அயோத்திதாசர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டமும், பழங்குடியினருக்கு தொல்குடிகள் குடியிருப்பு மேம்பாட்டு திட்டமும் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்றில் ஒரு பங்கு பொதுமக்களின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படும் நமக்கு நாமே திட்டத்தில் பட்டியலின, பழங்குடியினருக்கு மக்கள் பங்களிப்பு அய்ந்தில் ஒரு பங்கு என குறைக்கப்பட்டுள்ளது.*

★ *திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் 30 ஆண்டுகளாய் முடங்கி கிடந்த ஈங்கூர் மற்றும் முதலிப்பாளையம் தாட்கோ தொழிற்பேட்டைகள் ரூ.200 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு பட்டியல் வகுப்பார் மற்றும் பழங்குடி சமூகங்களைச் சார்ந்த தொழில்முனைவோர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.*

# கொள்கைக்காக உயிர்நீத்த உடையார்பாளையம் வேலாயுதம்!

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை, கருஞ்சட்டை வீரர்களை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ஊடகவியலாளர் ர.பிரகாசு எழுதி வருகிறார். உடையார்பாளையம் குறித்து விவரிக்கிறது இக்கட்டுரைத் தொடர்.**

சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டில் நாம் இருக்கிறோம். இந்த நூற்றாண்டு காலபயணம் தமிழ்நாட்டின் சமூக பொருளாதார-பண்பாட்டு வளர்ச்சிக்கான பாதையை அமைத்திருக்கிறது. ஒவ்வொரு தனிமனிதரின் கல்வி, வேலைவாய்ப்புக்கான ஏணியாக மற்றெந்த இயக்கத்தையும் விடவும் அதீத பங்களிப்பைச் செய்த இயக்கமாக சுயமரியாதை இயக்கமும், அதன் பரிணாம வளர்ச்சியாக உருவெடுத்த திராவிட இயக்கமும் திகழ்கின்றன. ஆனால், சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க காலம் அவ்வளவு இனிமையானது அல்ல. நெருப்பாற்றில் எதிர்நீச்சல் போடுவதற்கு சமமான காலம் அது. இயக்கத்தின் தலைவராக இருந்த பெரியார் மீதே செருப்பு வீசப்பட்டது, பாம்பு வீசப்பட்டது, மலம் வீசப்பட்டது என்றால் சாமானிய தொண்டர்களைப் பற்றிச் சொல்லத்தான் வேண்டுமா?

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அருகேயுள்ள கரடிக்குளம் என்னும் சிற்றூரில் சாமிநாதன் என்பவருக்கும் பொன்னாச்சி அம்மையாருக்கும் ஐந்தாவது மகனாக 1910–ஆம் ஆண்டு, பிறந்தவர் வேலாயுதம். திருச்சி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இரண்டு ஆண்டுகளும், சிதம்பரம் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சி கல்வியும், சாரணர் பயிற்சியும் முடித்தவர். மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கமும், இராமலிங்க அடிகளாரின் சன்மார்க்க சங்கம் வலியுறுத்திய சமத்துவ நெறிகளும் படிக்கும் காலத்திலேயே இவரை பெரிதும் ஈர்த்துள்ளன. அந்த ஈர்ப்பின் திசையில் ‘குடிஅரசு’ இதழை வாசிக்க, பெரியாரின் வழித்தடத்தில் தனது பாதையை அமைத்துக்கொண்டார். 1938–ஆம் ஆண்டு, முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்தபோது, 28 வயது இளைஞராக போராட்டக்களங்களில் பங்கேற்றார்.

**பெரியார் நேரடியாக உடையார்பாளையத்திற்குச் சென்று, வேலாயுதம் கொலை செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிட்டார். வேலாயுதத்தின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அன்று இரவே கூட்டம் ஒன்றை நடத்தி, காவல் துறையின் மெத்தனத்தைக் கண்டித்துப் பேசினார்.**

படித்து முடித்தவுடன் உடையார்பாளையத்திலேயே ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். பள்ளியில் மாணவர்களுக்கு பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளையும், சுயமரியாதை இயக்கம் பேசும் சமூகநீதி அரசியலையும் பாடத்துடன் சேர்த்து புகட்டினார். ‘கல்வி ஒன்றுதான் சமூக விடுதலைக்கான வழி’ என்ற பெரியாரின் சிந்தனையை ஆழ்மனதில் ஏற்றிக்கொண்டவர், அப்பகுதியில் கிராமம் கிராமாகச் சென்று ஊர் மக்களிடம் பேசி, தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புங்கள் என மன்றாடி அவர்களை கல்வி நிலையங்களுக்கு அழைத்து வந்தார். அப்படி, மாடு மேய்த்துக்கொண்டிருந்த மாணவர்களையும் அழைத்து வந்து கல்வியில் அவர்களை ஈடுபடச் செய்ததன் விளைவாக பல மாணவர்கள் பட்டதாரிகள் ஆனார்கள்.

குறிப்பாக, அங்குள்ள உல்லியக்குடி கிராமத்தில் பின்னாளில் தொடக்கப்பள்ளி உருவானபோது அப்பள்ளியின் முதல் தலைமை ஆசிரியராகப் பணியமர்த்தப்பட்டவர் மாரிமுத்து என்பவர். பள்ளிக்கு வராமல் மாடு மேய்த்துக்கொண்டிருந்த இவரை அழைத்து வந்து, கல்வியின் அவசியத்தை அவரின் பெற்றோருக்கும் உணர்த்தி படிக்கச் செய்தவர் வேலாயுதம். உழைக்கும் மக்களில் பெரும்பான்மையானோருக்கு கையெழுத்து கூட போடத்தெரியாத காலம் அது. கல்வி அவர்களுக்கு எட்டாத தொலைவுக்கு போயிருந்தாலும், அவர்களையும் பண்படுத்த வேண்டுமென்று சிந்தித்தார் வேலாயுதம். இரவு நேரங்களில் மாணவர்களுடன் சேர்த்து பெற்றோரையும் வரவழைத்து கூட்டங்கள் கூட்டி, நாடகங்கள் நடத்தி அவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

ஆசிரியராக கல்விச்சாலைக்குள் மேற்கொண்ட பணிகளுக்கு மத்தியில், பெரியார் தொண்டராகக் குடும்பத்திலும் சமூகத்திலும் பகுத்தறிவுப் பணியையும் தொடர்ந்தார். அன்றைய காலச்சூழலுக்கு புரட்சிகரமான பல செயல்களை செய்யத் துணிந்தார். விளைவு அவரையே விலையாகக் கொடுக்க நேர்ந்தது. இருகையூர், மீன்சுருட்டி, இராங்கியம், சாலப்பட்டி, உடையார்பாளையம் எனப் பல்வேறு பகுதிகளில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார் வேலாயுதம்.




ஊர் மக்களுக்குக் கடிதம் எழுதிக்கொடுப்பது, பத்திரிகைகளைப் படித்து, அவர்களுக்குச் செய்திகளை எடுத்துச் சொல்வது, அரசு அலுவலகங்களின் செயல்பாடுகளை விளக்குவது, அரசு அலுவலகங்களில் பொதுமக்களுக்கு உதவிகள் தேவைப்பட்டால் இவரே உடன் சென்று உதவுவது என எண்ணற்ற பணிகளைச் செய்துவந்தார். இதற்காக ‘கிராம மன்றம்’ ஒன்றையும் ஏற்படுத்தினார். திருக்குறள் நூல்களைச் சிறிய அளவில் அச்சடித்து, தொடக்கப் பள்ளிகளுக்குச் சென்று விற்பார். பெரியாரின் ‘குடிஅரசு’, ‘விடுதலை’, அண்ணாவின் ‘திராவிட நாடு’ இதழ்களை ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்தார். இன்றைக்கும் லட்சக்கணக்கில் விற்பனையாகிக் கொண்டிருக்கும் ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்கிற நூலைத் தன் சொந்தச் செலவில் வாங்கி மக்களிடையே பரப்பினார்.

‘படிப்பை விட்டுவிட்டு உழவுப் பணிகளைப் பார்’ என்ற பெற்றோரின் கடும் எதிர்ப்பையும் மீறி படித்து ஆசிரியரானவர். 30 கிலோ மீட்டருக்கு மேல் சைக்கிளில் சென்று படித்தவர். வீட்டில் பணம் தராவிட்டாலும், அரசு செய்த சிறுசிறு உதவிகளை வைத்தே கடும் சிரமத்துக்கு மத்தியில் படித்தவர். கூடவே பெரியார் மீதான பற்றும் இருந்ததால், கல்வியின் முக்கியத்துவத்தை, பொதுமக்களுக்குப் புரியவைத்து, அனைவரையும் படிக்கவைக்க எண்ணற்ற உதவிகளைச் செய்தார்.

கிழிந்த ஆடைகளுடன் மாணவர்கள் பள்ளிக்கு வந்தால், அவர்களுக்குத் தன் செலவிலேயே புதிய ஆடைகள் வாங்கிக் கொடுப்பார். கடும் பசியோடு வகுப்பறையில் மாணவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்தால், தன் வீட்டுக்கு அனுப்பி, மனைவி ஜெகதாம்பாளிடம் அவர்களுக்கு உணவு கொடுக்கச் சொல்வார். அவர்கள் மேல்படிப்பைத் தொடர உதவிகள் செய்தார். மாணவர்கள் தங்கிப் படிக்க, தன் வீட்டையே கட்டணமில்லாமல் அவர்களுக்குக் கொடுத்து உதவினார். இதனாலேயே, வேலாயுதம் இடமாறுதல் அடைந்து வேறு பள்ளிக்குச் செல்லும் போதெல்லாம், மாணவர்கள் அவரைக் கட்டியணைத்து அழுவர்.

அத்தகைய ‘மக்கள் ஆசிரியரா’கத் திகழ்ந்த வேலாயுதம், உடையார்பாளையத்தில் பணியாற்றும்போது எண்ணற்ற சமூகப் புரட்சிகளையும் செய்துள்ளார். அங்கு அவர் பணியாற்றி வந்த பள்ளி, சிவன் கோயில் தெருவில் இருந்தது. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அந்த தெரு வழியாகப் பள்ளிக்கு வரக்கூடாது என்று அங்கிருந்த பார்ப்பனர்கள் தடைபோட்டு வைத்திருந்தனர். உடையார்பாளையம் கடைவீதியில் இக்கொடுமையை எதிர்த்துக், கூட்டம் போட்டுப் பேசினார் வேலாயுதம். நாளை அத்தெரு வழியாகத் தாழ்த்தப்பட்ட மாணவர்களை அழைத்துச் செல்வேன் என்றும் அறிவித்தார். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், மறைந்திருந்த சிலர் அவர்மீது கல் வீசித் தாக்கினர். ஆனால், அதைக் கண்டெல்லாம் அஞ்சாமல் மறுநாள் சொன்னபடியே செய்துகாட்டினார். அதன்பிறகு, அப்பகுதியில் இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பெருமளவு தங்கள் குழந்தைகளைப் படிக்க அனுப்பினர்.

பள்ளிகளில் ஆதிக்கச் ஜாதியினருக்கு ஒரு இடம், இடைநிலைச் ஜாதியினருக்கு ஒரு இடம், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குத் தனி இடம் என்றெல்லாம் நிலவிய கொடுமைகளைத், தான் பணியாற்றிய அனைத்து இடங்களிலும் அறவே ஒழித்துக்கட்டினார்.

ஆசிரியர் என்ற அளவில், பள்ளி மாணவர்களுக்கு வகுப்பு எடுப்பது, இடையிடையே சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பேசுவது என்ற அளவில் மட்டும் வேலாயுதம் இருக்கவில்லை. பெண்கள் பொதுவெளியில் தலைநிமிர்ந்துகூட நடக்க இயலாத அளவுக்கு ஆணாதிக்கச் சிந்தனைகள் தலைவிரித்தாடிய அந்தக் காலத்திலேயே, தன் மகள் மங்கையர்க்கரசியை மேடையேற்றிப் பேசச் செய்தார். கூந்தல் வளர்த்து, அதைப் பராமரிப்பது வீண் வேலை என ‘கிராப்’ வெட்டிக்கொள்ளச் செய்தார். மிதிவண்டி ஓட்ட கற்றுக்கொடுத்தார். கணவரை இழந்த பெண்களுக்கு மறுமணம் செய்துவைத்தார். ஜாதி மறுப்புத் திருமணங்களை நடத்திவைத்தார்.

‘உயர் ஜாதிக்காரர்களை ‘ஆண்டை’ என்றோ ‘எஜமான்’ என்றோ அழைக்காதீர்கள்’ எனத் தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். உணவு விடுதி ஒன்றுக்கு, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தன்னுடைய நண்பரோடு சென்றபோது, அனுமதிக்க மறுத்த அந்த உணவகத்தின் உரிமையாளருடன் கடும்விவாதம் செய்து, இருவரும் உணவருந்திவிட்டே அங்கிருந்து வெளியேறினர். இச்செயல்கள் எல்லாம் பழைமைவாதிகள் பலருக்கு எரிச்சலை ஏற்படுத்தின. இவரை இனியும் விட்டுவைக்கக் கூடாது என்று சதித்திட்டம் தீட்டினர். 13.11.1947 அன்று காலை, உடையார்பாளையம் பெரிய ஏரியின் மேற்குப் பக்கம் அமைந்திருந்த கோயில் மண்டபத்தில் வைத்து, வேலாயுதத்தை அடையாளம் தெரியாத நபர்கள் கழுத்தை நெரித்துக் கொன்றனர். பின்னர், உடலை அருகே இருந்த பலா மரத்தில், ஆடைகளின்றி கட்டித் தொங்கவிட்டுச் சென்றனர். மறுநாள் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்திலும் வேலாயுதம் படுகொலை செய்யப்பட்ட செய்தி வெளியானது. இந்தக் கொடூர சம்பவத்தைத் தற்கொலை என்று மாற்றிட சூழ்ச்சிகள் நடந்தன. வழக்கு தொடுக்கப்படாமலேயே காவல்துறையும் காலம் கடத்தியது. ஆனால், கொலையைக் கண்டித்தும், அங்கு நடக்கும் சூழ்ச்சிகளையும் தொடர்ந்து அம்பலப்படுத்திக்கொண்டே வந்தது ‘விடுதலை’ ஏடு.

1948–ஆம் ஆண்டு ஜனவரியில், பெரியார் நேரடியாக உடையார் பாளையத்திற்குச் சென்று, வேலாயுதம் கொலை செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிட்டார். வேலாயுதத்தின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அன்று இரவே கூட்டம் ஒன்றை நடத்தி, காவல் துறையின் மெத்தனத்தைக் கண்டித்துப் பேசினார். அண்ணா, கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், ஈ.வெ.கி.சம்பத் எனப் பலரும் வேலாயுதம் வீட்டிற்குச் சென்று ஆறுதல் தெரிவித்தனர். வேலாயுதம் வழக்கு அரசுக்கு நெருக்கடியாக மாறிய சூழலில், அன்றைய ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அரசு, விசாரணைக்காகத் தனி நீதிமன்றம் ஒன்றை அமைத்தது. ஆனால், நீதிதான் கிடைக்கவில்லை. குற்றவாளிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர்களின் பட்டியலை 13.6.1948 அன்று ‘விடுதலை’யில் வெளியிட்டார் பெரியார். பள்ளி ஆசிரியர்களாக இருந்த வைத்தியநாத அய்யர், முத்துசாமி சாஸ்திரி உட்பட 10 பேர் இவ்வழக்கில் கைதுசெய்யப்பட்டனர். ஜெயங்கொண்டம் தொகுதியின் அன்றைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த பி.வெங்கடாசலம், நடராசன், சண்முகசுந்தரம் ஆகிய மூவர் தலைமறைவாக இருந்தனர் என்கிறது ‘விடுதலை’ ஏடு. பார்ப்பனியமும் பணமுதலைகளும் சேர்ந்து செய்த படுகொலையாக வரலாற்றில் இன்றும் அப்பகுதியில் அறியப்படுகிறது வேலாயுதம் வழக்கு. வேலாயுதம் மறைந்துவிட்டார் என யாரும் அங்கு கல்வியில் இருந்து வெளியேறிவிடவில்லை, ஆதிக்கவாதிகளால் ஜாதி இறுக்கத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும் முடியவில்லை.

## தகடூர் சம்பத்துக்கு தோழர்கள் இறுதி மரியாதை!



மறைந்த பெரியார் பெருந்தொண்டர் தகடூர் சம்பத் அவர்களுக்கு, மே–14, 2026 அன்று காலை 7:30 மணிக்கு மேடவாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் கழகத்தின் சார்பில், மாவட்ட அமைப்பாளர் ம. கி. எட்வின் பிரபாகரன் ஒருங்கிணைப்பில், திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் த.நா. சூர்யா, கழகத் தோழர்கள் இரண்யா, திராவிட செல்வி, கவுரிசங்கர், மகேந்திரன், முகிலவன் ஆகியோர் புகழ் வணக்கம் செலுத்தினர்.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# இரண்டு நாள் பயிரங்கம் சேலம் மாவட்ட இளைஞர் அணி முடிவு!

*24.05.2026 அன்று மாலை 5.00 மணியளவில் இளம்பிள்ளையில் சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சிவசண்முகம் தலைமை வகித்தார். கூட்டத்தில் இளைஞர் அணியின் மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தனர். அதன் அடிப்படையில்கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

★ **மூத்த பெரியார் பெருந்தொண்டர் கழகத்தின் கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் வயது மூப்பின் காரணமாக கடந்த 17.05.2026 அன்று காலமானார். அவரது மறைவிற்கு சேலம் மாவட்ட இளைஞர் அணியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், புகழ் வணக்கத்தையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.**

★ **எதிர்வரும் ஜீன் மாதத்தில் இளைஞர் அணியின் சார்பில் 2-நாள் பெரியாரியல் பயிலரங்கம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.**

★ **சமூக வலைத்தளங்களின் மூலமாக இயக்கச் செயல்பாடுகளையும், இளைய தலைமுறையினருக்குச் சமூகநீதி, பகுத்தறிவு மற்றும் சுயமரியாதைச் சிந்தனைகளை இளைஞர் அணி வாயிலாக அதிகளவில் கொண்டு செல்வதெனவும் ஆலோசிக்கப்பட்டது.**



*சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் பிரபாகரன், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், பெரிய சோரகை ஆனந்த், சிவதாபுரம் அவினேஷ், கொங்கணாபுரம் கோகுலக்கண்ணன், செல்வடை ரமேஷ், குஞ்சாண்டியூர் சுவதரன், இளம்பிள்ளை கோபி, சேகர், குப்புசாமி, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

# பொம்மைகளை பகுத்தறிவு பேச வைத்த கலைவாணன் விடைபெற்றார்

***கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் இரங்கல் அறிக்கை:***

*கலைவாணன் (67) இறந்துவிட்டார் என்ற செய்தியை உள்ளம் ஏற்கவே மறுக்கிறது; அவருடன் பழகிய எவரும் அவருடைய நினைவுகளில் இருந்து மீளவே முடியாது. தன்னை சுற்றி இருப்பவர்கள் அனைவரையும் எப்போதும் கலகலப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருக்கக்கூடிய உயர்ந்த பண்பாளர்.*



*அவரது தந்தை முத்துக்கூத்தன் மிகச்சிறந்த திராவிட இயக்கத்தின் கலைப் போராளி; வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம் வழியாக பகுத்தறிவு சிந்தனைகளையும் திராவிட இயக்க கொள்கைகளையும் பரப்பியவர். தனது மகனை மிகச்சிறந்த கொள்கை வாரிசாக வளர்த்து எடுத்தார். மகனுக்கு என்.எஸ்.கிருஷ்ணன் நினைவாக அவர் சூட்டிய பெயர்தான் கலைவாணன். தந்தையிடமிருந்து பெற்ற உணர்வுகளோடு தனது கலை ஆர்வத்தை மிகச் சிறப்பாக வளர்த்துக் கொண்டார் கலைவாணன்.*

*தமிழ்நாட்டில் அபூர்வமாக உள்ள பொம்மலாட்டக் கலைஞர்களில் ஒருவர் கலைவாணன்.புராணங்களுக்கும் மடமை பிரச்சாரங்களுக்கும் பயன்படுத்தப்பட்ட பொம்மலாட்ட கலை வடிவத்தை சமூக மாற்றத்திற்கு பயன்படுத்திய பெருமை முத்துக்கூத்தன் அவர்களுக்கும் கலைவாணன் அவர்களுக்கும் உண்டு. பன்முக கலைத்திறன் அவரோடு இணைந்து இருந்தது பொம்மலாட்டம் மட்டுமல்ல; நாடகம், மேடை அலங்காரம், குழந்தைகளுக்கான பயிற்சி அளித்தல், சுற்றுச்சூழல் கருத்துக்களை பரப்புதல், மனித உரிமைகளுக்கான கருத்து பரப்புதல் என்று பன்முக ஆற்றல் கொண்டவர்.*

*பெரியார் கொள்கை உணர்வுடனே தனது குடும்பத்தையும் வளர்த்தார்; இரண்டு மகன்களுக்கும் ஜாதி மறுப்பு திருமணம் செய்து வைத்தார். நான் திராவிடர் கழகத்தில் இருந்த போது வீதிநாடகங்கள் நடத்த வேண்டும் என்று திட்டமிட்டு அவரிடம் கூறியபோது போது அவரே முன்வந்து கழக இளைஞர்களுக்கு நாடகப் பயிற்சிகளை வழங்கினார். அப்போது கவிஞர் காளமேகம் உருவாக்கிய நாடகக் குழுவில் நானும் தோழர்களும் பங்கேற்று நடித்தோம். கலைவாணனும் எங்களோடு இணைந்தார்.*

*தமிழ் ஈழ விடுதலைப் போராட்டங்களில்; தூக்கு தண்டனை எதிர்ப்பு போராட்டங்களிலும் அவர் பங்கு மிகப்பெரிது! பெரியார் திராவிடர் கழகம் தொடங்கிய காலத்தில் திண்டுக்கல் அருகே ஒரு மலைப்பகுதியில் தோழர்களுக்கு 10 நாள் நாடகப் பயிற்சி அளித்தார். பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம் மேடைகளில் பகுத்தறிவு கலை நிகழ்ச்சிகளை நடத்தியவர். குழந்தைகளிடம் பகுத்தறிவு கருத்துக்களை கொண்டு சேர்க்கும் நூல்களை குழந்தைகள் விரும்பி படிக்கும் வடிவத்தில் எழுதி உருவாக்கி வெளியிட்டவர். அவரது கற்பனைத் திறனும் அதை வடிவமைக்கும் ஆற்றலும் வியக்கத்தக்கது.*

*மாணவர் நகலக உரிமையாளர் எங்கள் அன்புத் தோழர் சவுரிராஜன் தமிழர்களின் தாள இசைப் பண்பாட்டை மீட்டெடுக்கும் நோக்கத்தோடு பெரும் பொருட்செலவில் நடத்திய "மகுடம்" நிகழ்ச்சியில் கலைவாணனின் பங்களிப்பு அளப்பரியது. சேலத்தில் ஏப்ரல்-2023 ஆம் ஆண்டு திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மாநில மாநாட்டில் பேரறிஞர் அண்ணா எழுதிய "சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்" பொம்மலாட்ட நிகழ்ச்சியை நிகழ்த்தினார்.*

*பயணமும் சுற்றுலாவும் போகும் போதெல்லாம் கலைவாணன் கட்டாயம் இருக்க வேண்டும் என்று தோழர்களால் விரும்பப்பட்டவர். அவரது கலகலப்பு சிரிப்பு, உரையாடல்கள் எப்போதும் கொள்கை சார்ந்தவை. தனது விரல்களாலும் குரல்களாலும் பொம்மைகளை பகுத்தறிவு பேச வைத்தவர். அவரது இருப்பு இன்னும் நீண்ட காலம் இருந்திருக்க வேண்டும். நட்பு சக்திகளை மகிழ்ச்சியாகவே வைத்திருந்தவர் இப்போது கண்ணீர் கலங்க வைத்து விட்டார். கலைவாணனுக்கு புகழ் வணக்கம்!*

*பொம்மலாட்டக் கலைஞர், பெரியார் தொண்டர், திராவிடர் கழகப் பொறுப்பாளர் கலைமாமணி மு. கலைவாணன் அவர்கள் மே-22, 2026 இரவு 11 மணிக்கு முடிவெய்தினார். அவருக்கு கழகத்தின் சார்பில், 23/5/26 மதியம் 4 மணிக்கு, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. பெரியார் இயக்க தோழமைகளான தோழர் சைதை மா.அன்பரசன் (திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர்), பேராசிரியர் சரஸ்வதி (பியூசிஎல்), அண்ணன் பேரறிவாளன், தோழர் சவுரிராஜன் (மாணவர் நகலகம்), ஊடகவியலாளர் குணசேகரன் (சன் நியூஸ்) ஆகியோர் புகழ் வணக்கம் செலுத்தினர்.*

*கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர் ரவிபாரதி, சென்னை மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், தோழர்கள் குகன், கார்த்திஸ்வரன், ஏழுமலை, அசோக், சு. கோபிநாத் (பகுதித் தலைவர்), த.நா. சூர்யா (பகுதி அமைப்பாளர்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

## ஆனூர்.ஜெகதீசன் துணைவியார் முடிவெய்தினார்



*தோழர் ஆனூர். ஜெகதீசன் அவர்களின் இணையர் மறைவுற்றார். அவருக்கு கழகம் சார்பில் 13.05.26 அன்று கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி மற்றும் கழகத் தோழர்கள் புகழ் வணக்கம் செலுத்தினர். அவரது மறைவிற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் 15.05.2025 மதியம் 2 மணி அளவில் சென்னை சைதாப்பேட்டை பகுதியில் உள்ள ஆனூர் ஜெகதீசன் அவர்களது இல்லத்திற்கு சென்று ஆறுதல் தெரிவித்தனர்.*

## ஜீவா நூலுக்கு சரியான பதில்!

*கம்யூனிஸ்ட்களிலிருந்து ஆள் பிடித்தாரா பெரியார்? சில நாட்களுக்கு முன்பாக முகப்புத்தகத்தில் ஒரு செய்தியை படிக்க நேர்ந்தது. அதில் ஈரோட்டுப் பாதை சரியா? என ஜீவா எழுதிய புத்தகத்தை கண்டு கொளத்தூர் மணியே ஆடிபோனார். அவரால் கூட பதில் சொல்ல முடியாத ஏற்கத்தக்க விமர்சனங்களால் ஆன புத்தகம் அது எனப் பெரியாரை இகழ்ந்து எழுதப்பட்டிருந்தது. இதற்கு சரியான பதிலை கொளத்தூர் மணி எழுதினார். மிகச்சரியான புள்ளிவிவரங்களுடனும், அதை அந்தகாலத்தில் நடந்த சம்பவங்களுடனும் ஒப்பிட்டு எழுதியிருப்பது மிக அருமை. என்னைப் போன்றோர் பெரியாரை சரியாக புரிந்துகொள்ள ஏதுவாக இருந்தது.*

**– ந.யதிந்தர். மதுரை**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : May 28, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran